தமிழ்நாடு சட்டப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1971 டிசம்பர் 17.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், திரு. பெ. சீனிவாசன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

Malaria Eradication Programme.

* 501 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Corporation of Madras has requested the Union Government for grants to implement the Malaria Eradication Programme; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) சென்னை மாநகராட்சி 12.33 இலட்சம் ரூபாய் செலவில் மலேரியா ஒழிப்புத் தீவிரத் திட்டம் ஒன்றை அண்மையில் தீட்டியுள்ளது. அத்திட்டத்தின் நோக்கங்கள் வருமாறு:—

(i) நகரில் உள்ள மொத்தம் சுமார் 50,000 கிணறுகளில் மலேரியாவைத் தோற்றுவிக்கின்ற புழு ஒழிப்பு பணியை மேம்படுத்துதல்;

(ii) நோய்க்கு இலக்கான இடங்களைக் கண்காணித்தல்;

(iii) சென்னை மாநகராட்சி முழுவதிலுமுள்ள மருத்துவ மனைகளிலும், மருத்துவ இல்லங்களிலும், மாநகராட்சி மருந்தகங்களிலும் இரத்தத் தடவல்களை (Samples) சேகரிக்க பணியாளர்களை நியமிப்பதன் மூலம் முன் கண்காணிப்பு வேலையை மேற்கொள்ளுதல்;

(iv) நோய் தொற்றிய இடங்களில், டி.டி.டி. மருந்து தெளித்தலும், எல்லா வகை மலேரியா நேர்வுகளுக்கும் அடிப்படை மருத்துவம் செய்தலும்.

இத்திட்டத்தை செயல்படுத்த ஆண்டுக்கு ரூ. 12 இலட்சங்கள் மானியம் கொடுக்கவேண்டுமெனக் கோரி, மைய மக்கள் நல்வாழ்வு குடும்பநல அமைச்சரிடம் மாநகராட்சி ஒரு மனு அளித்துள்ளது.

THIRU K. M. SUBRAMANIAM: In spite of the good measures taken, are the Government aware that the mosquitoes are terribly increasing in Madras City, and particularly in the extended areas?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: கொசுவினுடைய தொல்லை சென்னை மாநகரில் மிக அதிகமாக இருக்கிறது என்பது எல்லோரும் அறிந்ததாகும். ஏனென்றால், கொசுக் கடி என்பது எல்லோருக்கும் பொது. அதை ஒழிப்பதற்கான மிகத் தீவிர திட்டத்தை மாநகராட்சி மேற்கொள்ள வேண்டுமென்றால்,

தீவிரத் திட்டத்திற்காக அவர்களுடைய வரவு செலவுத் திட்டத்தில் அவர்களால் போதுமான அளவு நிதி ஒதுக்க முடியவில்லை. ஏற்கெனவே எந்த அளவு சுகாதாரப் பணிகள் நடைபெற்று வந்தனவோ அந்த அளவு தொடர்ந்து 'மெயின்டனென்ஸ்' செய்துவருவதற்காகத்தான் அவர்களுக்கு நிதி வசதி இருக்கிறது. அதனால், மலேரியாவுக்குக் காரணமாக இருக்கிற கொசுக்களை ஒழிக்கும் பணிகளில் தீவிர முயற்சி நடைபெறவில்லை. 'பீஸ்மீல்' ஆக, சில்லரை முறையில் நடைபெறுவதென்பது மிக்க வெற்றியை அளிக்காது. ஆகவே, அந்தத் தீவிரத் திட்டத்திற்கு 12 இலட்ச ரூபாய்க்கு மேல் தேவைப்படும்போது மாநகராட்சி மன்றம் அந்தத் திட்டத்தைத் தமிழ்நாடு அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கேட்டது. பொதுவாக, மலேரியா ஒழிப்புத் திட்டச் செலவில் ஒரு பெரும் பங்கை மத்திய அரசு செலுத்துவது வழக்கம் என்ற அடிப்படையில், மாநகராட்சி அதிலே சேர்க்கப்படாத காரணத்தால், மாநகராட்சியும் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் என்று திரும்பத் திரும்ப மத்திய அரசு வற்புறுத்தப் பட்டு வருகிறது.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : கொசு ஒழிப்பு மருந்து முன்பைப் போல் கொசுவைக் கொல்லக்கூடிய சக்தியுடையதாக இல்லை, அதனால் கொசுவைக் கொல்லவில்லை என்கிற புகார் வருகிறது. மருந்துகள் ஏதாவது மாற்றப் பட்டிருக்கின்றனவா? முன்போல் சாரமுள்ள மருந்துதான் தரப்படுகிறதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கொசுக்கள் கொல்லப்படாமலிருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கலாம். ஒன்று—திரும்பத் திரும்ப சில மருந்துகள் தெளிக்கப்படும்போது, அந்தக் கொசுக்களுடைய தாங்கும் சக்தி (ரெஸிஸ்டன்ஸ் கெபாஸிடி) அதிகமாகலாம். மற்றொன்று—திரும்பத் திரும்பத் தெளிக்கும் இடத்தில் மருந்து தரம் குறைந்தும் போய்விடலாம்.

Mental hospital at Kilpauk

* 502 *Q.*—THIRU **N. DENNIS : Will the Hon. the Minister for Public Health** be pleased to state—

(*a*) Whether any post graduate diploma course in psychiatry is to be started at the Kilpauk Government Mental Hospital soon; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) & (இ) சென்னை அரசு மனநோய் மருத்துவ மனையில் டி.பி.எம். (D.P.M.) வகுப்பு துவக்கும் செயற்குறிப்பு உள்ளது. இந்திய மருத்துவக் கழகத்தால் நியமிக்கப்பட்ட ஆய்வுக்குழு சென்னை மருத்துவக் கல்லூரியையும், அரசு மனநோய் மருத்துவ மனையையும் அங்கு இந்த வகுப்பு ஏற்படுத்துவதற்குள்ள வசதிவாய்ப்புகளை ஆராய்ந்துள்ளது. அதன் அறிக்கை எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : சென்னை அரசு மனநோய் மருத்துவ மனையில் அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும்? அது எவ்வளவு மதிப்பீட்டில் தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இப்படிப்பட்ட ஒரு படிப்பைத் தொடங்குவது என்றால், அதற்குரிய முறையில் எல்லாவிதமான முன் ஏற்பாடுகளும் செய்யக்கூடிய நிலை இருக்கிறதா என்பதை அகில இந்திய மருத்துவக் கவுன்சில்